இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்றம் - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்றத்தின் (''மன்றம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் மற்றும் 2019 இன் 23 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் மன்றம் (கூட்டமைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து மன்றத்தின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமானகவும் காட்டும் வகையில் சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுககான நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS for SMEs) இணங்க தயாரிககப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுககான நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS for SMEs) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மன்றத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மன்றத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட

கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது மன்றத்தின் கட்டுப்பாட்டு மன்றத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க மன்றத்தின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுககளைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மன்றம் கடந்த நான்கு ஆண்டுகளில் பொருள் மீளாய்வினை மேற்கொண்டிருக்காததனால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1.78 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் மன்றத்திதுக்குச் சொந்தமான ஒரு புரஜெக்டர், இரண்டு அச்சு	பொருத்தமான நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயாரித்து விரிவான நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வின் வெளிக்கள நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள ஒப்படைப்புக்களை	வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்தி நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை சரியாகவும் முழுமையாகவும் பேணுதல் வேண்டும். அத்துடன் அடுத்து வரும் ஆண்டிற்கான

இயந்திரங்கள், 06 இருப்பு அலுமாரிகள், ஒரு சோபா, ஒரு குளர்சாதன பெட்டி என்பன நிதிக்கூற்றுக்களிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ளடக்கப்படவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பிற்கு இணங்க அவதானிக்கப்பட்டது.	பூரணப்படுத்துவதுடன் இது சரிசெய்யப்படும்.	நிதிக்கூறறுக்களில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.5.2 சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவனங்களக்கான நிதி அறிக்கையிடல் நியமங்களுடனான (SLFRS for SMEs) **இணக்கமின்மைகள்**

உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ) சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS for SMEs) 10.15 இலிருந்து 10.18 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட் காலத்தினை காலரீதியாக மீளாய்வு செய்து கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4.71 மில்லியன் கிரயமான முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து நிகழ்காலத்தில் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து அச்சொத்துக்கள் பதிவேட்டிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போதும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த ரூபா 0.83 மில்லியன் கிரயமான சொத்துக்கள்	நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயாரித்து விரிவான நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வின் வெளிக்கள நடவடிக்கைகளை நாங்கள் பூரணப்படுத்தியுள்ளோம். நாங்கள் இந்த ஒப்படைப்பினை சுயாதீனமான கம்பனியாகிய Messers MNGP Associates Charted Accountants இற்கு ஒப்படைத்துள்ளதுடன் அவர்களின் இறுதி அறிக்கை பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த சொத்துக்கள் முறைப்படியாக மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்களின் கீழ் எங்களின QB கணக்கீட்டு முறைமைக்கு கொண்டு வரப்படும்.	சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் வினைத்திறனான பொருளாதார ஆயுட் காலத்தினை மீய்வு செய்வதற்கு நடவ்டிக்கை எடுத்தல் வேண்டும்.

	காணப்பட்டிருந்தும் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	மன்றத்துக்குச் ஒரு அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 1.68 மில்லியன் வருடாந்த குத்தகைக்கு 30 பேச்சஸ் காணி 30 ஆண்டுகள் காலத்திற்கு 2021 திசெம்பர் 29 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இக்காணிக்கு குத்தகை வாடகை செலுத்தப்பட்டு வந்திருந்தும் பயன்படுத்தும் உரிமையுள்ள ஒரு சொத்தாகவும் ஒரு குத்தகை பொறுப்பாகவும் மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் 20.16 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை.	ஐந்தொகையில் சொத்தினை பயன்படுத்தும் உரிமை மற்றும் பொறுப்பினை அடையாளம் காணல் தேவைப்படுவதானவது நிதி குத்தகை சம்பந்தமாக மாத்திரமாகும். இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 17) கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணியை குத்தகைக்கு வழங்குதலினை நிலையான சொத்தின் கீழ் நீண்டகால குத்தகையாக கருதலாம் என ஏற்பாடு உள்ளது. 2021 திசெம்பர் 29 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இலங்கை நிர்மாண கைத்தொழில் மன்றத்திற்குமிடையே கையொப்பமிடப்பட்ட 367 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் சில உரிமை காணப்படுவதுடன் விசேடமாக குத்தகைதாரருக்கு CCI (SL) 30 ஆண்டுகள் குத்தகை காலத்தில் எதிர்கால வருமானம் உழைக்ககூடிய உயர்வான அலுவலக அபிவிருத்தி செயற்திட்டத்தினை நிர்மாணிப்பதுடன் குத்தகை வழங்கப்பட்டுள்ள காணியை பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்துவதற்கான உரிமை உள்ளது. காலம் முடிவடைந்து குத்தகை வழங்குதல் முடிவடைந்ததன் பின்னர் பரஸ்பரமாக இணங்கிக்கொள்ளுகின்ற வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் புதுப்பிக்கும் உரிமை காணப்படுகின்றது.	பயன்படுத்தும் உரிமை உள்ள ஒரு சொத்து மற்றும் குத்தகை பொறுப்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ அல்லது தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் நியமத்தின் 20.16 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான வெளிப்படத்தல் செய்யப்படுதல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டில் பேரேட்டுக்கு இணங்க பணமாகச் செலுத்திய வருமான வரி ரூபா 4.12 மில்லியனாக இருந்த போதிலும் சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுககான நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS for SMEs) 7.4(உ) பந்திக்கு இணக்கமற்ற வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசின் கீழ் ஆண்டிற்கான வருமான வரிப் பெறுமதியாக ரூபா 4.37 மில்லியன் காட்டப்பட்டிருந்ததனால் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 0.25 மில்லியனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.	இது இடம்பெறுவது WHT இனை கவனத்திற்கு எடுத்துக் கொள்வதினாலாகும். நிலையான வைப்பு மூலதனம்/ வட்டி/ WHT சம்பந்தமாக மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு குறிப்புக்கள் நிதி திணைக்களத்தின் மற்றும் QB கணக்கீட்டு முறைமையில் உள்ளது.	காசுப் பாய்சசல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசின் கீழ் பணமாகச் செலுத்திய வருமானவரி பெறுமதி காட்டப்படுதல் வேண்டும்.
(ஈ)	சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS for SMEs) 2.36 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்தின் அங்கத்துவ பங்களிப்பு வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் காசு அடிப்படையில் அந்த வருமானம் ரூபா 6.38 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதற்கிணங்க முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிடைத்த ரூபா 0.58 மில்லியன் தொகையும் 2025 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 0.39 மில்லியன் தொகையும் 2024 ஆம் ஆண்டிற்கான வருமானமாக காட்டப்பட்டிருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந்	வருடாந்த அங்கத்துவ பணத்தை உள்ளபடியான பெறுவனவு அடிப்படையில் கணக்கீடு செய்தல் பின்பற்றப்படுவதுடன் எதிர்வரும் காலங்களில் நாங்கள் கணக்கீட்டு கொள்கைகளிலும் உள்ளடக்குவோம்.	ஆண்டிற்கான அனைத்து வருமானங்களும் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதுடன் அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்.

திகதி வரை கிடைக்க வேண்டிய ரூபா 0.99 மில்லியன் அங்கத்துவ பங்களிப்பு பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கடன்பட்டோரால் மன்றத்தின் வங்கி கணக்கிற்கு மேற்கொண்ட நேரடியான வைப்புக்கள் ரூபா 0.11 மில்லியன் உரிய கடன்பட்டோரை அடையாளங்கண்டு நிதி நிலைமை கூற்றில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் ‘‘அடையாளங்காணப்படாத கடன்பட்டோர் பெறுவனவுகள்’’ ஆக காட்டப்பட்டதனால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வணிக கடன்பட்டோர் மற்றும் பொறுப்புக்கள் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	இதனை அடுத்துவரும் ஆண்டில் அடையாளங்கண்டு கணக்கீடு செய்யக்கூடியதாக இருக்கும்.	நாளாந்தம் கடன்பட்டோர் பெறுவனவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு ஒரு நடைமுறையினை அறிமுகப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குதல் வேண்டும்.
(ஆ)	கடந்த ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாத அங்கத்துவ கட்டண வருமானம் மற்றும் மின்சாரம் உள்ளடங்கலாக ஏனைய செலவுகளின் தேறிய வித்தியாசமான ரூபா 0.12 மில்லியன் முன்னைய செம்மையாக்கல்களுக்குரிய தகவல்கள் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அப்பெறுமதி உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான விபரமான வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் 2024 ஆம் அண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிரிகத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	முறைமை அடுத்த ஆண்டிலிருந்து சரிசெய்யப்படும்.	முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் திரண்ட இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டு நிதிக்கூற்றுககளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டில் ரூபா 0.09 மில்லியனுக்கு கொள்வனவு செய்த கனணி கடினப் பொருட்களை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கணனி மற்றும் அச்சு இயந்திர பராமரித்தல் செலவுக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக்கள் மீதி அத்தொகையால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான கணனியின் பெறுமானத் தேய்வு பெறுமதியும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இவற்றினை சரிசெய்து சொத்துக்களில் உள்ளடக்கப்படுவதுடன் அடுத்து வரும் ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்தலும் சரியாக தயாரிக்கப்படும்.	கொள்வனவு செய்யப்படுகின்ற நிலையான சொத்துக்களை சரியாக அடையாளங்கண்டு உரிய நிலையான சொத்துக்கள் கணக்கில் செம்மையாக்கி அடுத்துவரும் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் சரிசெயயப்படும்.
(ஈ)	மீளாய்வாண்டிற்கான நிர்மாணக் கண்காட்சி வருமானத்தில் 2025 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கண்காட்சிக்காக வியாபாரக் கடைகளை வாடகைக்கு வழங்கியதன் மூலம் கிடைத்த ரூபா 0.46 மில்லியன் வருமானமும் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான வருமானம் அத்தொகையால் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களை உள்ளடக்கியதன் மூலம் இப்பணம் 2025 ஆம் ஆண்டு வருமானத்திற்கு உள்ளடக்கப்படும்.	வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டியதனால் அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது 2025 ஆம் ஆண்டிற்கு உரிய நாளேடுகளில் விளம்பரங்களை வெளியிட்டதன் மூலம் உழைத்த வருமானமாகிய ரூபா 0.97 மில்லியன் பிற்போட்ட வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தும் அந்த நாளேடுகளை அச்சிடுதல் செலவுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய செலவுகளான ரூபா 0.72 மில்லியன் மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்ததனால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் அத்தொகையால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்வரும் காலங்களில் நாங்கள் முற்கொடுப்பனவுகள், செலவுகள் போன்றவற்றை முன்கொண்டு வருவதுடன் அந்த உரிய வருமானங்கள் கணக்கீடு செய்யப்படுகின்ற ஆண்டின் போதே அவற்றிற்குரிய செலவுகளும் செம்மையாக்கப்படும்.	வருமானமும் அதற்குரிய செலவுகளும் உரிய காலத்திலேயே செம்யைமாக்கப்பட வேண்டும் என்பதனால் தேவையான சரிசெய்தல்கள் அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஊ)	மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் ரூபா 02 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் ரூபா 11.76 மில்லியன் நிலையான வைப்பு முதலீடாக காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டிற்குரிய ரூபா 9.29 மில்லியனான நிலையான வைப்பு முதலீட்டு வட்டி மீண்டும் முதலீடு செய்யப்பட்டிருந்தும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ காசு உட்பாய்ச்சலாகக் காட்டபபட்டிருந்தது.	முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் தரப்படவில்லை.	ஆண்டிற்கான முதலீட்டு பெறுமதியை சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் பதியப்படுதல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 319 ஆம் பிரிவு	மன்றம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பிணையால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக செயற்பட்டது. எவ்வாறாயினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து வரி விடுவிப்பு சான்றிதழினை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக கம்பனியின் கலைத்தல் நடைமுறையை பூரணப்படுத்துவதற்கு மன்றம் 2025 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை முடியாதிருந்தது.	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவல்லை	வரி விடுவிப்பு சான்றிதழினைப் பெற்று கம்பனியின் கலைத்தல் நடைமுறையை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய PED 01/2021(iii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	ஒவ்வொரு நிறுவனமும் அநத நிறுவனத்திற்கு விசேடத்துவமான நிதி மற்றும் நிருவாக வழிகாட்டிக் கோவை மற்றும் கையேட்டினைத் தயாரித்து அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மன்றத்தினால் அக்கையேடு தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவில்லை.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க சபைக்கு விசேடத்துவமான நிருவாக மற்றும் நிதி கையேட்டினை தயாரித்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14.04 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 16.11 மில்லியனாகும். அதற்கிணங்க் நிதி விளைவுகளில் ரூபா 2.07 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் இலங்கை கண்காட்சிக்குரிய செலவுகள் ரூபா 8.32 மில்லியனால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

விபரம்	**2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பெறுமதி (ரூபா மில்லியன்)**	**2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பெறுமதி (ரூபா மில்லியன்)**	**வித்தியாசம் அதிகரிப்பு / (குறைவு) (ரூபா மில்லியன்)**	**வித்தியாசம் சதவீதம் (சதவீதம்)**
வருமானம்				
நிர்மாணங்கள் இலங்கை கண்காட்சி	25.86	27.88	(2.02)	7
அங்கத்துவ கட்டணம்	6.38	4.97	1.41	28
வெளிநாட்டு வேலையாள்	7.84	4.59	3.25	71
ஏனைய வருமானம்	28.82	20.13	8.69	43
செலவுகள்				
நேரடி செலவுகள்	40.95	30.48	10.47	34
நிருவாக செலவுகள்	31.76	29.39	2.37	8
நிதிக் கிரயம்	0.021	0.063	(0.042)	67

2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

மன்றத்தின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான நடைமுறை விகிதம் 1:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுயைில் சொத்துக்கள் மீதான பிரதிபலன் விகிதம் மற்றும் உரிமை மூலதனம் மீதான பிரதிபலன் விகிதத்தில் குறைவு அவதானிக்கப்பட்டது. மன்றத்தின் முழுச் செலவுகள் ரூபா 10.48 மில்லியனால் அத்திகரித்தனால் தேறிய இலாபம் குறைவடைந்தமையானது இக்குறைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2021 திசெம்பர் 29 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் உருவாக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் வருடாந்த குத்தகை வாடகை செலுத்தாமையின் காரணமாக ரூபா 0.50 மில்லியன் அதாவது 30 சதவீத தாமத கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவில்லை.	வருடாந்த குத்தகை வாடகையினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தி தாமதக் கட்டணம் செலுத்துவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தாமதத்த்திற்கு பொறுப்புக்கூற வேண்டியதுடன் உத்தியோத்தர்களை அடையாளங்கண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மன்றம் அதன் அனைத்து ஆளணியினர்களையும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொண்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் முழு ஆளணியினர் 16 ஆகும். அந்த உத்தியோகத்தர்கள் 01 ஆண்டிலிருந்து 18 ஆண்டுகள் வரை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்தும் 2021 நவம்பர் 16	முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் தரப்படவில்லை.	தகமையுடன் அனுபவமுள்ள ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும் தாமதமின்றி

ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்ளல், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையினைத் தயாரித்தல் மற்றும் மனித வளங்கள் திட்டத்தினை தயாரித்தல் என்பன மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 வருடாந்த அறிக்கை

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் வரைபு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை இன்றுவரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2025 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவில்லை.	அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டுக் கையேட்டின் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஆண்டறிக்கையானது கணக்காய்வளார் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமறத்தில் முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 கூட்டினைந்த திட்டம்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனரீதியான கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின்	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவில்லை.	நிறுவனரீதியான கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டத்தினையும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினையும்

	பிரகாரம் மன்றத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக தந்திரோபாயத்திட்டம் மற்றும் அதற்கு இணங்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தினையும் வருடாந்த பாதீட்டினையும் தயாரித்து அமைச்சின் செயலாளரின் மூலம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களையும் செயற்பணிகளையும் நிறைவேற்றும் முறையை காட்டும் தந்திரோபாய திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் மன்றத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.		தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3. உள்ளக கணக்காய்வு

	கணக்காய்வு அபிப்பிராயம்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்காக அந்த நிறுவனத்தின் நிருவாக மன்றத்தினால் ஒரு உள்ளக கணக்காய்ளவார் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காக பொருத்தமான ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் மன்றத்தினால் நியமிக்கப்படவில்லை.	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவில்லை.	மன்றத்திற்கு ஒரு உள்ளகக் கணக்காய்வாளரினை நியமித்து கணக்காய்வு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் அதன் உள்ளக கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 கணக்காய்வுக் குழு

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிருவாக மன்றத்துக்கு உதவியளிக்கும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு இருக்க வேண்டியதுடன் அக்குழு ஒவ்வொரு நிறுவனத்தின் செயலாற்றலினை தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்து நிருவாக மன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் இந்த நிறுவனத்திற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை நியமித்து அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவத்தினால் கருத்துரை தரப்படவில்லை.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை நியமித்து அதன் செயற்பாடுகள் மற்றும் சிபாரிசுகளின் மூலம் நிருவாக மன்றத்தின் தீர்மானங்களை இன்னும் வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.